# இலங்கை நிகழ்நிலை காப்புச் சட்டமும் அடிப்படை உரிமைகளும்
# Sri Lanka Online Safety Act and Fundamental Rights

கலாநிதி ந. புஸ்பராசா
கலை கலாசார பீடம்

## அறிமுகம்

இன்றைய நவீன யுகத்தில் இணையமானது எமது அன்றாட வாழ்கையின் தவிர்க்கமுடியாத ஓர் அம்சமான மாறியுள்ளது. இது தகவல் தொடர்பு, வர்த்தகம் மற்றும் சமூக ஊடாடலுக்காக சகலரும் அணுகக்கூடிய தளமாகச் செயற்பட்டு, எண்ணற்ற நன்மைகளை மனித சமூகத்துக்கு வழங்கிவருகின்றது. மின்னணு தொழில்நுட்பங்களின் அபரிவிதமான வளர்ச்சியானது தகவல் பரிமாற்றம், வலையமைப்புக்களை உருவாக்குதல் மற்றும் அடையாளங்கள் கட்டமைத்தல் போன்றவைகளில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளனன. எனினும், இணையமானது பல உள்ளார்ந்த அபாயங்களையும் கொண்டதாகக் காணப்படுகின்றது. குறிப்பாக, இணைய அச்சுறுத்தல் மற்றும் தனிநபர்களினுடைய உரிமை மீறல்கள் முதல் தவறான தகவல் மற்றும் நிகழ்நிலைத் தீவிரமயமாக்கல் வரை எண்ணற்ற அபாயங்களுக்கும் வழிவகுத்துள்ளது. எனவே, அரசுகளின் பாரிய பணி இணைய தகவல்களை ஒழுங்குபடுத்தி அது மனித சமூகத்துக்கு வழங்கியுள்ள நன்மைகளை அனுபவிப்பதை உறுதி செய்வதும் இணையவழியூடாகத் தன்னுடைய தேசிய பாதுகாப்புக்கும், இருப்புக்கும் ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஆகும். இந்தப் பின்னணியில் இணையவழி பாதுகாப்பைப் பேணுவதற்கான 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலைப் காப்புச் சட்டம் (The Online Safety Act, No. 9 of 2024) இலங்கை அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்டது. சர்சைக்குரிய இச்சட்டமானது நிகழ்நிலை தொடர்பாக ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்களை நிவர்த்தி செய்து இணையத்தளப் பாதுகாப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எனினும், இதன் பரந்த நோக்கம், துஷ்பிரயோகத்திற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் இலங்கை அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுடன் அதன் இணக்கத்தன்மை போன்றவை குறித்து கடுமையான கரிசனைகளை எழுப்பியுள்ளதோடு பல்வேறு வாதப்பிரதி வாதங்களுக்கும் வழிவகுத்துள்ளது. இந்தப் பின்னணியில்

இச்சட்டத்தின் முக்கிய விதிகளை ஆராய்ந்து, அடிப்படை உரிமைகள் மீதான அவற்றின் சாத்தியமான தாக்கத்தை வாசகர்களுக்கு வெளிப்படுத்துவதாக இந்த கட்டுரையானது அமைகிறது.

**இலங்கை நிகழ்நிலை காப்புச்சட்டம் சட்டம்**

கடந்த ஜனவரி 24ஆம் திகதி திருத்தங்களுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிகழ்நிலை காப்புச் சட்டமானது பெப்ரவரி 01 சபாநாயகரின் சான்றுரையுடன் 2024ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச்சட்டம் என்ற அடிப்படையில் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தினுடைய முக்கியமான உள்ளடக்கத்தை மிகச் சுருக்கமாக நோக்குகின்றபோது, இது தேசிய பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம், பொது ஒழுங்கு மற்றும் தவறான அறிக்கைகளின் மூலம் சமூகங்களுக்கிடையே தவறான எண்ணத்தையும் விரோதத்தையும் தூண்டக்கூடிய உள்ளடக்கத்தினை கொண்ட விடயங்களை வெளியிடுதல் மற்றும் பரப்புதல் போன்ற விடயங்களுக்காக இணையத்தைப் பயன்படுத்துவதை தடை செய்கின்றது. மேலும், நீதிமன்றத்தை அவதூறு செய்யும் வகையிலான கருத்துகளை வெளியிடுதல், இணையத்தில் மோசடிகளில் ஈடுபடுதல் மற்றும் மற்றுமொருவரைப் போல நடித்து நிகழ்நிலை மோசடியில் ஈடுபடுதல் என்பன தண்டனைக்குரிய குற்றங்களாக்கப்பட்டுள்ளன. அத்தோடு அரசாங்க அதிகாரம் மற்றும் பொது அமைதிக்கு எதிரான குற்றங்களைத் தூண்டும் கருத்துகளுடன், மக்களிடையே கலவரத்தை தூண்டும் அல்லது அச்சம் மற்றும் பீதியைத் தூண்டும் நோக்கத்துடன் கருத்துக்களை வெளியிதல் போன்றவை குற்றமாக்கப்பட்டுள்ளன. துன்புறுத்தல் தொடர்பான தகவல்களைப் பரிமாறுதல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் தவறொன்றை மேற்கொள்வதற்காக நாட்குறிப்பு தயாரித்தல் அல்லது மாற்றியமைத்தல் என்பன குற்றவியல் செயற்பாடாக இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோருக்குச் சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டு தண்டனைகளையும் வழங்கப்படக்கூடிய வாய்ப்புக்களும் காணப்படுகின்றன.

இச்சட்டமானது நிகழ்நிலை உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்தல் மேற்பார்வையிடுதல் மற்றும் சட்டப்பூர்வ விதிகளைச் செயல்படுத்துதல் ஆகியவற்றுடன் நிகழ்நிலை வெளியீடுகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரித்தல், அவற்றினை அகற்றுதல் தொடர்பான அறிவிப்புகளை வெளியிடுதல், மீறல்களுக்கு அபராதம் விதித்தல் ஆகியவற்றை உள்ளடக்கி பரந்தளவிலான அதிகாரங்களை பெற்ற நிகழ்நிலைப் பாதுகாப்பு ஆணைக்குழுவினை

நிறுவுவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. தொழில்நுட்பம், சட்டம், நிர்வாகம், சமூக சேவை, பத்திரிகைத்துறை, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் முகாமைத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஐந்து உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இவ்வாணைக்குழு உறுப்பினர்கள் அரசியலமைப்புப் பேரவையின் அனுமதிக்கு அமைவாக ஜனாதிபதியால் நியமிக்கப்படவேண்டும்.

மேற்படி சட்டத்தால் தடைசெய்யப்பட்ட உள்ளடக்கத்திற்கான அணுகலை அகற்ற அல்லது கட்டுப்படுத்த, இணைய சேவை வழங்குநர்களும், இணைய இடையீட்டாளர்களும் செயலூக்கமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனச் சட்டம் உள்ளடக்க ஒழுங்குமுறை தொடர்பாக வேண்டுகிறது. அதேநேரம், இணையவெளியில் கருத்துச் சுதந்திரம், தனிநபர் உரிமைகள், தகவலுக்கான அணுகல் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை அங்கீகரித்துப் பாதுகாக்கின்றது என்பதோடு உள்ளடக்க சீராக்கல் நடைமுறைகள் இந்த உரிமைகளை மீறுவதில்லை என்பதையும், உள்ளடக்கத்தை அகற்றுவது தொடர்பான முடிவுகளுக்கும் மேல்முறையீடு செய்யும் திறனைப் பயணர்கள் கொண்டிருப்பது போன்ற பயணர் உரிமைகள் மற்றும் பாதுகாப்புகளை நிறுவுகின்றது. மேலும், உள்ளடக்க சீராக்கல் நடைமுறைகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலின் முக்கியத்துவத்தைச் சட்டம் வலியுறுத்துகிறது. உள்ளடக்க வழங்குநர்கள் தங்கள் உள்ளடக்க சீராக்கல் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய தெளிவான மற்றும் அணுகக்கூடிய தகவலை வழங்க வேண்டும். சட்டத்திற்கு இணங்குவதை உறுதிசெய்வதற்காக அவை வழக்கமான தணிக்கை மற்றும் அறிக்கைத் தேவைகளுக்கு உட்பட்டு இருக்கும். மேலும், நிகழ்நிலை தொடர்பான பிரச்சினைகள் மாறும் சிக்கல்களைத் தீர்பதற்காக சர்வதேச ஒத்துழைப்பின் அவசியத்தைச் சட்டம் அங்கீகரிக்கிறது. இது எல்லை தாண்டிய நிகழ்நிலைத் தீங்குகளை எதிர்த்துப் போராடுவதற்கும் பாதுகாப்பான மின்னணு சூழலை மேம்படுத்துவதற்கும் பிற நாடுகள் மற்றும் தொடர்புடைய சர்வதேச அமைப்புகளுடன் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.

**அடிப்படை உரிமைகள்**

அடிப்படை உரிமையானது அரசியல் யாப்பில் சட்டரீதியாக அரசாங்கத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளாகும். இது ஒரு நாட்டில் உள்ள சகல தனிநபர்களும் கௌரவமாக வாழ்வதற்கு அவசியமானதாகக் கருதப்படும் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களாகக் காணப்படுகின்றன. அடிப்படை உரிமைகள்

நியாயமான, ஜனநாயக சமூகத்திற்கு அவசியமானவையாக உள்ளன. இவை தனிநபர்களை வலுப்படுத்துகின்ற அதேநேரம் சமத்துவத்தை மேம்படுத்தி அதிகார துஷ்பிரயோகத்தைத் தடுத்து அரசுக்கும் பொதுமக்களுக்குமான ஒரு பாலமாகக் காணப்படுகின்றன.

இலங்கை, அதன் அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள், உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் அதன் அதிகார வரம்பிற்குள் பொருந்தக்கூடிய குறிப்பிட்ட அடிப்படை உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. அந்தவகையில் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மூன்றாவது அத்தியாயத்தில் 10-14 வரையிலான உறுப்புரைகளில் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகளும், 15ஆவது உறுப்புரையில் இந்த உரிமைகள் மீது விதிக்கப்பட்டுள்ள அதன் மட்டுப்பாடுகளும், 16ஆவது உறுப்புரையில் அடிப்படை உரிமைகள் மீறப்படும்போது பெற்றுக்கொள்ளப்படும் சட்டப் பரிகார வழிமுறைகள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 10ஆவது உறுப்புரையானது சிந்தனை, மனச்சாட்சி, மதத்துக்கான சுதந்திரம் போன்ற உரிமைகளை வழங்குகின்றது. 11ஆவது உறுப்புரையானது சித்திரவதை, இழிவான மற்றும் மனிதாபிமானமற்ற நடத்தை மற்றும் தண்டனைகளிலிருந்து சுதந்திரம் வழங்குகின்றது. உறுப்புரை 12 ஆனது இனம், மதம், மொழி, சாதி, பாலினம், அரசியல் கருத்து அல்லது தோற்றம் போன்ற பல்வேறு காரணிகளின் அடிப்படையில் பாகுபாடு காட்டாமல், சட்டத்தின் முன் சமத்துவம் மற்றும் சமமான பாதுகாப்பை உறுதி செய்கிறது.. 13ஆவது உறுப்புரையானது எதேச்சையாக கைது செய்வதிலிருந்து சுதந்திரம் மற்றும் சட்ட ரீதியான செயல்முறைக்கான உரிமையை உறுதி செய்கின்றது. பேச்சு, கருத்து வெளியீடு, ஒன்றுகூடுதல், மதச் சுதந்திரம், மொழி, நாட்டுக்கு மீண்டும் திரும்பி வருதல், தாம் விரும்பிய இடத்தில் வசித்தல் போன்ற உரிமை மற்றும் சுதந்திரத்தினை உறுப்புரை 14 உறுதிசெய்கின்றது.

இவ்வாறிருந்த போதிலும், இலங்கை அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பல்வேறு குறைபாடுகளை உடையதாக பொதுவாக விமர்சிக்கப்படுகின்றது. அதாவது, அடிப்படை உரிமைகள் பகுதியில் உயிர் வாழ்வதற்கான உரிமைகள் வெளிப்படையாகக் கூறப்படாமை, சொத்துரிமை, கல்வி, சுகாதாரம் வீட்டு உரிமை போன்ற சமூக உரிமைகள் மற்றும் குழு உரிமைகள் ஆகியவை குறிப்பிடப்படவில்லை. எனினும், இலங்கை அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் குறைந்தபட்சம் இலங்கை

பிரசைகளுக்கு உலகளாவிய மனித உரிமைகள் அமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட சில அடிப்படை உரிமைகளை வழங்குகின்றது. இது பிரசைகள் பரந்த மனித உரிமைகள் உலகத்துடன் ஈடுபடுவதற்கும் மனித உரிமைக் கோட்பாடுகளைப் பற்றி சிந்திக்கவும் ஒரு நுழைவுப் புள்ளியாக செயல்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அடிப்படை உரிமைகள் மீதான நிகழ்நிலைப் காப்புச் சட்டத்தினுடைய தாக்கம்**

அரசியல் யாப்பு ரீதியாக வழங்கப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட உரிமைகளுக்கு அப்பால், அரசாங்கத்தினால் தேசிய பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு என்ற போர்வையில் கொண்டுவரப்படுகின்ற பல்வேறு சட்டங்களும் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்மீது தாக்கம் செலுத்துகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில், அவசரகாலச் சட்ட ஏற்பாடுகளான 1947ஆம் ஆண்டு பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற அவசர கால ஒழுங்குவிதிகள், 1979 ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்) மற்றும் தற்போது கொண்டுவரப்பட்டுள்ள இந்த நிகழ்நிலை காப்புச் சட்டம் ஆகியவை இதில் உள்ளடங்கும்.

மறுபுறம், இலங்கை போன்ற ஒரு பன்முகப் கலாசாரத்தைக் கொண்டுள்ள நாட்டில் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் நாட்டில் காணப்படும் பல்வேறு இன, மதக் குழுக்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாக்கும் அதேநேரம் இந்தக் குழுக்களுக்கிடையில் இணையதளங்கள் ஊடாக ஏற்படும் சாத்தியமான வன்முறைகளையும், தேசிய பாதுகாப்புக்கும், தேசிய நல்லிணக்கத்துக்கும் எதிராக இடம்பெறக்கூடிய கருத்துப் பரிமாற்றங்களையும், சமூகத்தில் காணப்படும் விளிம்புநிலைக் குழுக்களான சிறுவர்கள், பெண்கள் போன்றவர்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களையும் தடுக்கவேண்டியது அரசாங்கத்தினுடைய கடமையாகும். இது சர்வதேச ரீதியாகவும், அரசியல் யாப்பு ரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனிநபர் உரிமைகளையும் தேசிய பாதுகாப்பு மற்றும் அமைதியையும் சமநிலைப்படுத்தி ஆரோக்கியமான ஜனநாயக கலாசாரத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமானதாகும்.

இலங்கையில் அண்மைக்காலத்தில் அதிகரித்த வகையில் இணையத்தளங்கள் ஊடாக பல்வேறுபட்ட எதிர்மாறான நிகழ்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. குறிப்பாக இலங்கையின் நல்லிணக்கத்தைப்

பாதிக்கக்கூடிய வகையிலான பல்வேறு கருத்துக்கள் திட்டமிட்டு சமூக வலைத்தளங்கள் ஊடாகப் பரப்பப்படுவதோடு அவை வேகமாக பெரும்பாலானவர்களைச் சென்றடைவதையும் பல்வேறுபட்ட நிகழ்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதேநேரம், சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகம் இணையதளத்திலும் சமூக வலைத்தளங்களிலும் நாளுக்கு நாள் அதிகரித்த வகையில் இடம்பெறுவதையும் அவதானிக்கலாம்.

இந்தப் பின்னணியில் இந்த விளிம்புநிலைக் குழுக்களையும் மற்றும் சகல தனிநபர்களினுடைய உரிமைகளையும் ஒழுங்குபடுத்துவதற்காகவே அரசாங்கத்தினால் இந்த நிகழ்நிலைப் காப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது எனக் கூறப்படுகின்றது. எனினும், சட்டத்தின் தெளிவற்ற விதிகள், பரந்த அதிகாரங்கள் மற்றும் துஷ்பிரயோகத்திற்கான சாத்தியக்கூறுகள், அவை கொண்டுவரப்பட்ட காலச் சூழ்நிலைகள் போன்றவை அரசியலமைப்பில் உள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக விமர்சிக்கப்படுகின்றது. எனவேதான், இந்தச் சட்டத்துக்கும் தனிநபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கும் இடையே ஒரு சரிசமவீத நிலையை ஏற்படுத்த அரசாங்கம் தவறியுள்ளதாக பல்வேறுபட்ட உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்கள் மற்றும் முகவர்களிடமிருந்து கணிசமான விமர்சனங்கள் எழுந்தவண்ணம் உள்ளன. இவை மக்களின் அரசியலமைப்பு உரிமைகளை நிலைநிறுத்தும் அதே வேளையில் சமூக சவால்களை திறம்பட எதிர்கொள்ளும் சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு மிகவும் நுணுக்கமான அணுகுமுறையின் அழுத்தமான தேவையை எடுத்துக்காட்டுகிறது.

நிகழ்நிலைச் சட்டமானது அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை, குறிப்பாக கருத்து வெளியிடும் உரிமை, பேச்சுச் சுதந்திரம் போன்றவைகளை மோசமாகப் பாதிக்கும் என விமர்சிக்கப்படுகிறது. சட்டமானது தனிப்பட்ட தகவல் தொடர்புக்கான வரையறுக்கப்பட்ட விலக்குகள் உள்ளன எனக் கூறப்பட்டாலும், தனியார் என்பதன் வரையறை தெளிவற்றதாகவே காணப்படுகின்றது. இணைய சேவை வழங்குநர்களுக்குப் பரந்த அதிகாரங்களை வழங்கி 'தடைசெய்யப்பட்டவை' என்று கருதப்படும் உள்ளடக்கத்தை அகற்ற நிர்ப்பந்திக்கப்படலாம். அவ்வாறு உடன்படவில்லை எனில் அதற்கு அபராதம் விதிக்கப்படும். இது அரசாங்கத்தின் கண்காணிப்பு மற்றும் தனிநபர்கள் அல்லது குழுக்களைக் குறிவைக்க சட்டத்தை தவறாகப் பயன்படுத்துதல் பற்றிய கரிசனைகளை எழுப்புகிறது. மேலும், 'தடைசெய்யப்பட்ட அறிக்கைகள்' பற்றிய

சட்டத்தின் தெளிவற்ற வரையறை கருத்துச் சுதந்திரம் தொடர்பாக அரசியல் யாப்பில் காணப்படும் அடிப்படை உரிமையைக் கடுமையாகப் பாதிக்கும் என்பதோடு இது அரசாங்கத்துக்கு எதிரான விமர்சனக் குரல்களை மௌனமாக்கி பொது விவாதங்களைத் தடைசெய்வதாக அமையும். அத்தோடு சட்டத்தின் தணிக்கை அதிகாரங்கள், தகவலுக்கான அணுகலைக் கட்டுப்படுத்தலாம். தகவல் பெறுவதற்கும் அர்த்தமுள்ள உரையாடலில் ஈடுபடுவதற்கும் பொதுமக்களின் உரிமையைக் கட்டுப்படுத்தலாம். இது அரசியல் யாப்பில் புதிதாக உள்வாங்கப்பட்ட அடிப்படை உரிமையான தகவலறியும் உரிமைச் சட்டத்தில் பாரிய மட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றது. சட்டத்தின் உள்ளடக்கத்தை அகற்றுவதற்கான தெளிவான நடைமுறைகள் இல்லாதது மற்றும் தன்னிச்சையான முடிவுகளுக்கான சாத்தியக்கூறுகள் உரிய செயல்முறை மற்றும் நியாயமான விசாரணைக்கான உரிமை பற்றிய கரிசனைகளை எழுப்புகின்றன. எனவே, நிகழ்நிலை காப்புச் சட்டமானது சர்வதேச மனித உரிமைகள் தராதரங்கள், இலங்கை அரசின் கடப்பாடுகளை மீறுபவையாகக் காணப்படுகின்றது.

இதனுடைய உருவாக்கமும் விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. அவசர அவசரமாக பல்வேறு தரப்புக்களினுடைய கோரிக்கைகளையும் புறக்கணித்து இயற்றப்பட்ட இச்சட்டமானது இலங்கை உச்ச நீதிமற்றத்தினுடைய தீர்ப்புக்களுடனும் இணங்கிச் செல்லவில்லை என விமர்சிக்கப்படுகின்றது. அதாவது, நீதிமன்றத்தின் பரிந்துரைகளின்படி பல பிரிவுகள் (13, 16, 19, 20, 27) திருத்தப்படவில்லை. இந்தப் பிரிவுகள் நீதிமன்ற அவமதிப்பு, மத உணர்வுகள், தேசிய பாதுகாப்பு மற்றும் விதிவிலக்குகள் போன்ற பிரச்சினைகளைக் கையாளுகின்றவைகளாகக் காணப்படுகின்றன. நீதிமன்றம் அறிவுறுத்தியபடி மின்னஞ்சல் மற்றும் ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்வது போன்ற சில சேவைகளுக்குச் சட்டம் முழுமையாக விலக்கு அளிக்கவில்லை. இந்தப் பிரிவுகள் நிறைவேற்றப்படுவதற்கு பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை தேவை என உச்சநீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், இவை முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அரசாங்கம் சட்டத்தினைச் சில மாற்றங்களுடன் சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றியது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, இந்தச் சட்டத்தினுடைய சட்டப்பூர்வத் தன்மை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது. இது சட்டத்தின் ஆட்சி மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய கவலைகளை எழுப்புகிறது. மேலும், தரவுப் பாதுகாப்பு, பயனர்/பயனாளிகளின் தனியுரிமை மற்றும் நிபுணர்களின் பங்கு பற்றிய

கரசினைகளைச் சட்டம் போதுமான அளவில் நிவர்த்தி செய்யவில்லை எனவும் விமர்சிக்கப்படுகின்றது.

இது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினுடைய ஒரு முக்கிய கரிசனையாகக் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான மையமானது இந்தச் சட்டத்தினுடைய செயல்முறை, சட்டபூர்வத் தன்மை மற்றும் ஜனநாயகத்தின் மீதான அதன் தாக்கம் என்பவை தொடர்பில் தன்னுடைய கரிசனைகளை வெளியிட்டுள்ளது. அதேபோல், சர்வதேச மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை இந்தச் சட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், இது மனித உரிமைகளுக்கு விழுந்த அடி என விமர்சித்தது. இதேபோல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையும் தன்னுடைய கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தினுடைய இந்தச் சட்டமானது சர்வதேச தராதரங்களுடன் ஒத்துப்போகவில்லை என்ற விமர்சனத்தை முன்வைத்ததும் குறிப்பிடத்தக்கதாகும். உள்நாட்டு மற்றும் சர்வதேச அமைப்புக்களின் இந்த கூட்டு விமர்சனங்கள், சட்டத்தின் தாக்கங்கள் மற்றும் உலக அளவில் மனித உரிமைகள் விதிமுறைகளுடன் அதன் சீரமைப்பு தொடர்பான பரவலான அமைதியின்மையை எடுத்துக்காட்டுகின்றன.

இந்தச் சட்டமானது அவசர அவசரமாக நாடு பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியிலிருந்து மீள்ச்சியடைகின்ற நேரத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த முயற்சியானது பொருளாதாரக் கொள்கைகள் மீதான கருத்து வேறுபாடுகளை அடக்குவதையும், விமர்சனங்களை மௌனமாக்கி சர்வாதிகாரப் பாதையூடாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான முயற்சியா என்ற வினாவையும் எழுப்புகின்றது. ஏனெனில் சீனா, தென்கொரியா போன்ற நாடுகள் இந்தகைய உபாயங்களை கடைப்பிடித்து பிரசைகளின் அடிப்படை உரிமையைச் சமரசம் செய்துள்ளன. மேலும், தேர்தல்கள் நெருங்கிவரும் இந்தச் சூழ்நிலையில் இயற்றப்பட்ட இந்தச் சட்டடத்தை அரசாங்கம் எதிர்க் கட்சிகளையும், எதிர்புக்குழுக்களையும், சிவில் செயற்பாட்டாளர்களையும் அடக்குவதற்கான ஓர் ஊடகமாக பயன்படுத்தக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது. இவை தவிர தடைசெய்யப்பட்ட அறிக்கைகளை வரையறுக்கவும் அகற்றவும் நிகழ்நிலை காப்பு ஆணைக்குழுவைச் சட்டம் அனுமதிக்கிறது. இது அகநிலை மற்றும் துஷ்பிரயோகத்திற்கான அடிப்படையாகக் காணப்படுகின்றது என விமர்சிக்கப்படுகின்றது. தவறான அறிக்கைகள் மீதான கட்டுப்பாடுகள் முறையான விமர்சனத்தை அடக்குவதற்குப் பயன்படுத்தப்படலாம்.